H.M. ரெட்டி
அளிக்கும்
ரோகிணியின்
வஞ்சம்
டைரக்ஷன்: Y.R. சுவாமி M.A.

H. M. ரெட்டி

அளிக்கும்

வஞ்சம்

நடிகர்கள்

காந்த ராவ்	...	பிரதாப்
ரஜனலா	...	ஆக்ரம்
G. வெங்கடேஸ்வர ராவ்	...	ஜெயராம்
K. சாரங்கபாணி	...	சிட்டு
கல்யாணம்	...	கொத்தவால்
சுதர்சன்	...	சுதர்சன்
S. V. சாமா	...	அரசர்
மாது	...	மாது

நடிகையர்

சாவித்திரி	...	பத்மினி
கிரிஜா	....	லக்ஷ்மி
சீதா	...	பார்வதி
அம்புஜவல்லி	...	கொத்தவாலின் மனைவி
ஜெயலக்ஷிமி	...	கிராமப்பெண்

மற்றும்

நாகேஸ்வர ராவ், லக்ஷ்மையா சவுத்திரி, கோலப்பன், பாசவய்யா & T. R. கண்ணன்.

பின்னணி இசை

ரோஹினி, பஹவதி, ஜிக்கி, A. P. கோமளா, ராணி, கஜலக்ஷ்மி, A. M. ராஜா.

டெக்னிகல் சூபர்விஷன் H. V. பாபு

"வஞ்சம்"

நாட்டை நாசமாக்கும் நயவஞ்ச நாடோடிகளை கண்டு பிடித்துத்துலைத்து தூளாக்குவதே எங்கள் வேலை வஞ்சம்! வஞ்சம் எங்கள் வாழ்வின் லக்ஷியம்!

மூன்று வீரர்களின் அறை கூவல் இது, ஒருவன் மது என்ற சிறுபையன், மற்ருெருவன் ப்ரதாப் என்ற வீர இளைஞன் மூன்ருவன் சுதர்சன் என்ற உடற்கட்டுள்ள ஒரு மல்லன். மூவர் சுக வாழ்க்கையும் இந்த கொள்ளைக்கார கும்பலின் கொடுமைக்கு ஆளாகிறது.

அக்ரம்சிங் துரவரம் பூண்ட அரசனின் முதல் மந்திரி, நாட்டு நிர்வாகம் அவன் கையில், இந்த சந்தர்பத்தை பயன்படுத திக்கொண்டு பட்டிணத்தாராகிவரும் மன்னனை பதவியிலிருந்து தள்ளி தான் அரசனுகவேண்டும் என்பது அக்ரம் சிங்கின் தணியா ஆசை. சபாபதி படைத்தலைவன். தன் ஒரே மகளான பத்மினியை: ராணியாக்க வேண்டும் என்பது அவனுடைய ஒரே ஆசை. ஆகையால் சபாபதி மந்திரிக்கு உடைந்தையாகிருன். இவர்களுடைய மறை முகமான தலைமையில் தான் நாட்டில் கொள்ளையும், சூரையும் நடக்கிறது. மதுவின் தந்தை இதற்கு பலியாகிருர். தந்தையை இழந்த மதுவின் மனதில் தான் வஞ்சம் முதலில் உருவாகிறது.

கொள்ளைகாரர்களின் அட்டகாசம் பெருகுகிறது. ஒரு சமயம் தவருதலாக சபாபதியின் மகள் பத்மினியையே தாக்கு கிருர்கள். ஆனல் தன் தங்கையின் கல்யாணத்தை நடத்த கிராமத் திற்கு வந்து கொண்டிருக்கும் ப்ரதாப் என்ற வீர இளைஞன் அந்த சமயத்தில் பத்மினியை காப்பாற்றிவிட்டு செல்கிருன் பத்மினி பிராதாப்பின் வீரத்தை எண்ணி மெய்மறக்கிருள்.

ப்ரதாபின் தங்கைக்கு கல்யாண ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கிறது. ப்ரதாப் நகை சேலை முதலியன வாங்க வெளியே புறப்பட்டு போகிருர். லக்ஷிமி தனக்கு வரப்போகும் கணவனை நினைத்து சந்தோஷமாக பாடிக்கொண்டிருக்கிருள். அக்ரம் சிங் அவளை பார்த்து விடுகிருர். உடனே அவளை தூக்கிவர ஏற்பாடு கள் செய்கிருன். லக்ஷமி அக்ரம சிங் கால் கற்பழிக்கபடுகிருள். அவமானம் தாங்காமல் லக்ஷிமி தற்கொலை செய்து கொள்ளு கிருள். சாகும் தருவாயில் ப்ரதாப் வீடு திரும்புகிருன் லக்ஷிமி யின் கோரநிலை கண்டு குமுருகிருன் "அண்ண சண்டாளன் கெடுத்துட்டான் பணக்காரன் மார்பில் பாம்பு போல பச்சை" சாகும் லக்ஷிமியிடம் இந்த வார்த்தைகளை கேட்டான் ப்ரதாப். கொந்தளித்தான் அந்த பாம்புகுரி பாதகனை கண்டுபிடித்து வஞ்சம் தீர்த்து கொள்வதாக சபதம் செய்கிருன்.

இந்த அக்ரமத்தை சொல்லி நீதி வேண்டி ப்ரதாப் அக்ரம சிங்கிடமே செல்கிறான். அக்ரம சிங் ஒன்றும் தெரியாதவன் போல் சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டு பின்னாலே தன் ஆளை அழைத்து ப்ரதாப்பை கொல்ல உத்தரவிடுகிறான். அவ்வாறே ப்ரதாப்பை இவர்கள் கட்டி பிடிக்கிறார்கள். ஆனால் அங்கு வந்திருந்த சுதர்சனும், மதுவும் இதைக்கண்டு ஹனுமான் வேஷத்தில் குதித்து ப்ரதாப்பை காப்பாற்றுகிறார்கள். இந்த கலவரத்தில் மது அக்ரம் சிங்கின் முட்டாள் சிநேகிதனான சிட்டு என்பவனை சந்தித்து, பயமுறுத்தி தினம் காட்டுக்கடுத்த ஹனுமான் கோயிலுக்கு வரவேண்டுமென்று கட்டளை யிடுகிறான்.

கொள்ளைகாரர்கள் கொடுமைக்கு ஆளான மூவரும், சேர்ந்து நாட்டை நாசமாக்கும் இந்த கும்பலை கண்டுபிடித்து அழிப்பதாக சபதம் செய்து கொள்கிறார்கள். அக்ரமசிங்கின் முட்டாள் சிநேகிதன் சிட்டு மூலம் கொள்ளைகாரர்களின் நடவடிக்கைகளை கொஞ்சம் அறிந்துகொண்டு அவர்களை எதிர்த்து தாக்குகிறார்கள் இந்த மூவரும்.

தன்னை காப்பாற்றிய ப்ரதாப் அளித்த கத்தியை பூஜை செய்கிறாள் பத்மினி காதல்வளர்கிறது. காதலனைக்கண்டுபிடிக்க தோழி பார்வதி செல்கிறாள். பாாவதி அழைத்து வந்த பத்மினியின் காதலன் கடைசியில் ஒரு குரங்காக இருக்கிறது. தோழியின் கேலியை கண்டு கோபித்து கொள்கிறாள் பத்மினி.

தனக்கு எதிராக மூன்று பேர் வேலை செய்கிறார்கள். என்று அறிந்த அக்ரம் சிங் அவர்களை எப்படியாவது பிடிக்க உத்தரவிடுகிறான். முதலில் மாமா சாமி என்பவன் அவர்களிடம் போய் அகப்பட்டு கொள்ளுகிறான் உடனே சபாபதி தானே போய் பிடிப்பதாக கூறிவிட்டு ப்ரதாப் வசிக்கும் கிராமத்திற்கு போய் ஜனங்களை ப்ரதாப்பை காட்டிக்கொடுக்கும்படி ஹிம்சிக்கிறான். ஆனால் ப்ரதாப் அங்கு தோன்றி சபாபதியை மரத்தில் கட்டி வைத்து ஜனங்களை விடுதலை செய்கிறான்.

இந்த சமயத்தில் தந்தையிடம் தமாஷ் செய்வதற்கு எண்ணி பத்மினியும் பார்வதியும் திருடன் வேஷத்தில் வருகிறார்கள். திரும்பி வரும் ப்ரதாப்பை திருட்டு வேஷத்தில் சந்திக்கிறார்கள். தன் காதலன் ப்ரதாப் உண்மையாகவே திருடன் என்று தவறுதலாக நினைத்து கொண்டு உடைந்த மனதுடன் செல்கிறாள் பத்மினி. மது குடு குடுப்பைகாரன் வேஷத்தில் சென்று, தப்பபிப்ராயத்தை தெளிவாக்குகிறான். பத்மினியும் ப்ரதாப்பும் ஹனுமான் கோயில் மறைவிட குகையில் சந்திக்கிறார்கள்.

வீடு திரும்பிய பத்மினி தன் தந்தை காயங்களுடன் வந்திருப்பதை கண்டு பதருகிறுள். அவர்களுடைய சம்பாஷணை யின் போது முன் பின் யோசியாமல் ப்ரதாப், மது முதலியவர் களைப்பற்றி புகழ்ந்து விட்டு தந்தையை அவர்கள் இருக்கும் இடத்திற்கு அழைத்து செல்ல உடன்படுகிருள். இதை பயன் படுத்திக்கொண்டு சபாபதி ப்ரதாப்பை சிறை பிடித்து செல்கிருள் ஆனல் பத்மினி தன் தவறுக்குப்பிராயச் சித்தமாக ப்ரதாப்பை தந்திரமாக மீட்கிருள்.

ப்ரதாப் தப்பிவிட்ட சேதியை அறிந்த அக்ரம்சிங் அடங்கா சினம் கொண்டு அந்த கிராமத்தை சூரையிட்டு தன் எதிரிகளை பிடிக்க உத்திரவிடுகிருன். பத்மினியும் ப்ரதாப் முதலியவர்கள் கிராமத்தார்களை காப்பாற்றுவதில் முனைகிருர்கள். அந்த நெருக் கடியில் சபாபதி மாருவேஷத்தில் இருந்த பத்மினியை கத்தியால் குத்துகிருன். பத்மினி தந்தையை திருடன் உடையில் பார்கிருள். அதிர்ச்சியால் மூர்ச்சையடைகிருள்.

பத்மினியின் உடல் நிலையைவிட மனநிலை மோசமாகி விடுகிறது. பிதற்றுகிருள் அவள் வேதனையை கண்டபடி சபாபதி உள்ளம் பதைக்கிறது. தான் செய்த தவறுகள் தான் பத்மினி யை இந்நிலைக்கு கொண்டு வந்ததென்று உணர்கிருன். திருந்திய மனிதனை அக்ரம் சிங் திருந்தாவிடில் அவன் பாதக செயலை கடிதங்களின் ருசு மூலம் பஹிரங்க படுத்துவதாக பயமுறுத்து கிருன் சபாபதியிடம் அந்தரங்க கடிதங்களை பறித்துக்கொண்டு அவனை கொல்ல உத்திரவிடுகிருன். சபாபதி தப்பி ஒடுகிருன். சிப்பாய்கள் துரத்துகிருர்கள். ஒரு சிப்பாய் அவனை குத்தி விடுகிருன். குத்திக்காயத்துடன் சாகும் நிலையில் வீட்டுக்கு கொண்டு வரப்படுகிருன். மரணத்தருவாயில் சபாபதி தன் மகளிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு அக்ரம்சிங் தான் எல்லா கொடுமைகளுக்கும் காரணம் என்றுகூறி உடனே பறிக்கப்பட்ட ருசுக்கடிதங்களை கைபற்றி அசரசரிடம் சேர்த்தால் தான் அக்ரம் சிங்கின் அக்ரமங்களை அரசர் அறிய முடியும் என்று சொல்லி விட்டு இறக்கிருன். ப்ரதாப் உடனே அக்ரமசிங் மாளிகைக்கு ஒடுகிருன். ருசு கடிதங்கள் கொளுத்தபடும் சமயத்தில் அவனை எதிர்த்து முஷ்டி யுத்தம் செய்து கடிதங்களை கை பற்றிக்கொண்டு வந்து விடுகிருன். அக்ரமசிங்கால் அவனை பிடிக்க முடியவில்லை பத்மினியை கைது செய்து எங்கேயோ வைத்து விடுகிருன்? பத் மினி எவ்வாறு காப்பாற்றப்படுகிருள். அரசனிடம ருசுக்கடிதங் கள் எப்படிப்போய்சேருகிறது. மூவர் வஞ்சம் எவ்வாறுதீருகிறது.

விடைகளை வெள்ளித்திரையில் கண்டு களியுங்கள்.

வஞ்சம்

1.

வெல்லுமா, தர்மம் வெல்லுமா
கைபலம் வெல்லுமா (வெல்)

கொல்லும் புலியின் குணத்தின் கொடுமையை
கொஞ்சும் அன்பே வெல்லுமா
கைபலம் வெல்லுமா

மண்மோகம் கொண்டு பெண்மோகம் கொண்டு
மண்டலம் யாவையும் தன்வலியால் வென்று
உன்னத மானிடன் ஒருவனின் அன்பினுல்
உயிரிழந்தே சாய்ந்த ராவணன் கைபலம்
வெல்லுமா தர்மம் வெல்லுமா

பறவை உயிர் காத்த பார்த்திபன் நாட்டிலே
பசுவிற்கு நீதி புரிந்த பொன்னுட்டிலே
அறப்பால் ஊட்டிய வள்ளுவன் நாட்டிலே
அபலையை வாட்டிடும் அசுரர்கள் கைபலம்
வெல்லுமா தர்மம் வெல்லுமா

2. பத்மினி

ஆனந்தமேன் இவ்வானந்தம்—
ஆஹாஹா
ஆனந்தமேன் இவ்வானந்தம்.

மனமுன்னை கண்டதும் மயங்கியே
கொண்டிடும் (ஆ)

எனதுயிர் காத்தவன் மனதினுள்
வந்தனன்
உனையெறிந்தே எந்தன்
உளம்வசம் கொண்டனன்

கதிர் ஒளிவாளே!
கதிர் ஒளிவாளே சொல்
காதலோ இது காதலோ (ஆ)

அவனுடன் வாழ்ந்த உன் அருங்கதை தன்னிலே
அமுதின் சுவையிதேன் அகம் மகிழ்ந்தாடுதேன்
கவின்மிகு வாளே !
கவின்மிகு வாளே சொல் காதலோ இது காதலோ (ஆ)

திறமிகு வீரனே ஜெயமுறு தீரனே
உருவில் கம்பீரனே உயர் சுகுமாரனே
காண ஏங்கு தேனே !
காண ஏங்கு தேனே சொல் காதலோ இது காதலோ (ஆ)

3. லக்ஷ்மி

வரப்போறார் இதோ வரப்போறார்
மாலைபோட்டு உன்கையைத் தொடப்போறார்
தானே வரப்போறார் (வர)

தரப்போறான் அண்ணா தரப்போறான்—உன்னை
தங்கமான ஆண்பிள்ளைக்கு தரப்போறான் (வர)

மன்மதன் போல் ரூபமாம் மனமயங்கும் பருவமாம்
மனமயங்கும் பருவமாம்.
என் மனம் போல் இவரும் இருப்பாரோ எனக்கீடோ
இருப்பாரோ எனக்கீடோ
நல்ல ஜோடி என்னைத் தேடி (வர)

சண்டை போடும் சிப்பாயாம்—நான்
சலாம் போட வேணுமாம்
ஜம்பமெல்லாம் செல்லாதென
சொன்னாலும் தான் போதுமா
ஐயாவுடைய ஆட்ட பாட்டம்
அம்மாவிடம் சாயுமா—இந்த
அம்மாவிடம் சாயுமா
கை கட்டிக் சேவகன் போல்
வாழ வேணும் தெரியுமா
உஷார், உஷார், உஷா

4. பிரதாப்

துள்ளியே ஓடுமே வாழ்வுமே
பள்ளமும் மேடிருந்தாலுமே
செல்லுமிவ் வண்டிபோல் செல்லுமே
டக் டகா டக டகா டக டகா

பாதை—கொண்டேகிடும் தன்னாலே
இன்பம்—உண்டு உந்தன் முன்னாலே
நீயும்—தங்கிடாதே பின்னாலே
தாவுமிக் குதிரையின் வேகம் போல்
தாண்டியே போகுமே வாழ்வுமே
வேண்டிடும் சந்தோஷமே காணுமே
டக் டகா டக டகா டக டகா.

என—தாசை நிறைவேறுமே
தங்கை—பாசம் ஒன்றே போதுமே
செல்வம்—யாவும் போனாலென்ன
ஏழையானாலென்ன
இதோ—கண்முன் நடந்தேறுமே
எந்தன்—தங்கையின் கல்யாணமே.
டக் டகா டக டகா டக டகா

5. மது

மயங்காதே மனிதா—மனம்
கலங்காதே மனிதா (மயங்)

மலையைப் போலே இடர் வந்து
விட்டாலும்
மலையாதே நீ மனிதா (மயங்)

போனதை நினைத்துப் புலம்பித் தவித்து
புண்ணிய முண்டோ மனிதா
ஆனதை எண்ணி அழுது சாகதே
அறிவில்லாமல் அழிந்து
போகாதே (மயங்)

கோழை வாழ்வு வாழாதே நீ கொடுமை கண்டு அஞ்சாதே நீ
ஊழ்வினை வெல்லும் உறுதி கொள்ளுவாய் நீயே வெல்வாய்
நீயே வெல்வாய் (மயங்)
கத்தியினாலே ஆகா தென்றால் யுக்தியினாலும் ஆகாதோ
—யுக்தியினாலும் ஆகாதோ
யுக்தியும் சக்தியும் ஒன்று சேர்ந்திடில்
அக்ரமம் யாவும் மாய்ந்திடும் பாராய்
இனி—அக்ரமம் யாவும் மாய்ந்திடும் பாராய் (மயங்)
வேளை வந்ததினி எழுவாய்
வினை—அழைக்கு துன்னையே விரைவாய்
வெற்றி காண்பமென ப்ரதிக்ஞை செய்தே
வேகமாக முன்னேறுவோம் வாராய் (மயங்)

6. பத்மினி

மனமே நீ கலங்கிடாதே
துயரால் மடிந்திடாதே
கனவெல்லாம் கலைந்த பின்னே
நினைவால் பயன் உண்டாமோ (மன)

கானல் நீ ரொன்று கண்டே
வெங்கானில் திரிந்தலைந்த
மானின் ஏமாந்த கதை போல்
காதல் முடிந்ததிங்கே (மன)

ஹா.....................
பூ வொன்றை நான் கண்டேன்
—அதன்
புன்னகை கொய்திடச் சென்றேன்
பூவில் இணைந்த முள்ளால்
புண்ணாகினேன் என்
செய்வேன் (மன)
விதியினையே வெல்வதாமோ
வீணில் வேதனை ஏனோ
மதியே மயங்கி வீழ்ந்தாய்
அவனை மறந்து வாழ்வாய் (மன)

7. பத்மினி—பார்வதி

ஓ, தளுக்குமாமா! ஓ ஜிலுக்கு மச்சான்!
வாங்க மாமா ஓ.. வாங்க மச்சான்
வாங்க மாமா வேகும் வெயிலில் போகாதீங்க எட்டி
நீங்க போகதீங்க எட்டி
மணியக்காரன் தண்ணீர் பந்தல் வச்சிருக்கான் கட்டி—இதோ
வச்சிருக்கான் கட்டி (வாங்க)

தாகம் தீர மோரு தாரோம் தவிச்சவாய்க்கு தண்ணீர் தாரோம்
தருமம் தானே வாங்க வாங்க, அருந்தத்தாரோம் கொட்டி
நீர்—அருந்தத் தாரோம் கொட்டி (வாங்க)

தொகையரு

கரும்பு வெல்லம் ஏலம் சுக்கு கலந்த நல்ல பானகம்
காசு வேண்டாம்—சும்மா வாங்க
காசு வேண்டாம் துட்டு வேண்டாம், பேஷா குடிச்சு போங்க.
அரும்பு மீசை அண்ணே அண்ணே ஆயாசமேன் வாவா முன்னே
குளுமையான பானகந்தான்—
குளுமையான பானகந்தான் கொட்டித்தர்ரா குட்டி—அதோ
—கொட்டித்தர்ரா குட்டி (வாங்க)

காக்கி ஜவான் ஜமேதாரே
கால்சுடுமே போகாதீரே

ஊக்கந்தரும்—உங்களுக்கு

ஊக்கந்தரும் பானகந்தான்
உடம்புக்கு நல்ல கெட்டி
உடம்புக்கு நல்ல கெட்டி (வாங்க)

நிர்மாணர்கள்

கதை	...	H. M. ரெட்டி & N. சீதாராமன்
வசனம்	...	N. சீதாராமன்
பாடல்கள்	...	குகன்
படப்பிடிப்பு டைரக்டர்ஸ்	...	D. L. நாராயண் & V. K. B மணியம்
ரிகார்டிஸ்ட்	...	A. M. V. சுப்புராஜ்
ஆர்ட் டைரக்ஷன்	...	L. V. மன்டிரி (G. D. A. பாம்பே(& A. V. தர்மா ராவ்
சங்கீத டைரக்டர்	...	T. A. கல்யாணம்
டான்ஸ் டைரக்டர்ஸ்	...	சோப்ரா & வெம்பதி சத்தியம்
மேக்கப்	...	நாரயணசாமி
ஸ்டில்ஸ்	...	P. C. M. ஈஸ்வரபாபு
வெளியீடு	....	பிரசாத் & கேதா
எடிட்டர்	...	S. P. N. கிருஷ்ணு
பென்சிங் மாஸ்டர்	...	ஸ்டன்ட் சாமிநாதன்
ப்ரொடக்ஷன் மானேஜர்	...	W. ரங்கசாமி நாயுடு
ப்ரொடக்ஷன் சீப் எக்சிகூடிவ்	...	M. L. புருஷோத்தம் ரெட்டி
அசோசியேட் டைரக்டர்	...	G. பங்காருராஜ்

உதவியாளர்கள்

டைரக்ஷன்	...	கோபாலகிருஷ்ணன்
கேமரா	...	P. குட்டி & K. ஜானகிராமன்
ஒலி	...	G. T. அரசு & J. வெங்கட்ராமன்
மேக்கப்	...	வெங்கட்ராமய்யா & பாப்ஜி
எடிட்டிங்	...	தேசிகன்

டைரெக்டர்

Y. R. சுவாமி M. A.

ஸ்டுடியோ

ரோகிணி ஸ்டுடியோ